# ஆரணி நகராட்சி

# நிர்வாக அறிக்கை 2011 – 2012

1. **அமைப்பும் மேலாண்மையும்**

1. **எல்லை வரம்பு.**

அ. ஆரணி நகரின் பரப்பளவு 11.62 சதுர கி.மீ

ஆ. நகராட்சி எல்லையில் எந்தவித மாறுதலுமின்றி கீழ்கண்ட வருவாய் கிராமங்களைக் கொண்டது.

1. புதுகாமூர்
2. ஆரணிப் பாளையம்
3. வண்டிப்பாளையம்
4. திருமலைச் சமுத்திரம்
5. கீழ் ஆரணி
6. திருமலைராயபுரம்
7. அனந்தபுரம்
8. சைதாப்பேட்டை
9. நாடகசாலைப் பேட்டை
10. தீவட்டித்தாங்கல்
11. பையூர் காஜிவாடைத் தெரு

ஆரணி நகராட்சி அரசு ஆணை எண். பல்வகை 564 வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள். 2.4.51–ன் படி மூன்றாம் நிலை நகராட்சியாக அமைக்கப்பட்டு பின்னர் அரசாணை எண். 85 நாள். 22.05.98 ன் படி முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது. 2001 ம் ஆண்டின் மக்கள் தொகை 60.815 இதில் ஆண்கள் 30,162 பெண்கள் 30,653 ஆகும். மேலும் இந்நகராட்சி அரசு ஆணை 189 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள். 20.08.96 படி 33 வார்டுகளாக பிரித்து அங்கீகரிக்கப்பட்டது.

நிர்வாகத் தொகுப்பு :–

உறுப்பினர் விவரமும் அதில் பொது மற்றும் ஒதுக்கப்பட்ட வார்டுகள் விவரமும் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் விவரமும் கீழ்கண்டவாறு உள்ளது. நகரமன்ற தலைவர் வாக்காளர்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கும் முறை அமுலில் உள்ளது.

2001 ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட வார்டுகள் விவரம்.

1. பொது இடம் – 20

2. பெண்களுக்கு ஒதுக்கப்பட்டவை – 3, 7, 16, 17, 23, 24, 26, 27, 33

3. தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்டவை – 14 (பெ),18 (பெ) 29 , 31

அ. பொறுப்பு அலுவலர்கள் .

ஆணையாளர் – 1. திருமதி. எஸ். சசிகலா
01.04.2011 முதல் 31.03,2012 வரை

மேலாளர் – 1. திரு.என்.ஜனார்த்தனன், (மேலாளர் பொறுப்பு)
01.04.2011 முதல் 30.06.2011 வரை
2. திரு. ஜி. பழனி , மேலாளர்
01.07.2011 முதல் 31.03.2012 வரை

**1.4.2011 முதல் 24.10.2011 வரை நகரமன்ற தலைவர் துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர் பெயர்கள் பின்வருமாறு.**

| வார்டு எண். | பெயர் | பதவி |
|---|---|---|
| 7. | திருமதி. எல். சாந்தி | நகரமன்ற தலைவர் |
| 26. | திருமதி. எஸ். லட்சுமி | நகரமன்ற துணைத் தலைவர் |
| 1. | திரு. பி. குமார் | நகரமன்ற உறுப்பினர் |
| 2. | திரு. ஆர். கன்னியப்பன் | நகரமன்ற உறுப்பினர் |
| 3. | திருமதி. இ. அன்பு | நகரமன்ற உறுப்பினர் |
| 4. | திரு. வி.பி. இராதாகிருஷ்ணன் | நகரமன்ற உறுப்பினர் |
| 5. | திரு. எஸ். செல்வம் | நகரமன்ற உறுப்பினர் |
| 6. | திரு. எஸ். எ. அன்சர் பாஷா | நகரமன்ற உறுப்பினர் |
| 8. | திரு. எஸ். துரைபாபு | நகரமன்ற உறுப்பினர் |
| 9. | திரு. ஜி. வெங்கடேசன் | நகரமன்ற உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 10. | திரு. எல். கண்ணன் | நகரமன்ற உறுப்பினர் |
| 11. | திரு. கே.சி. குணசேகரன் | நகரமன்ற உறுப்பினர் |
| 12. | திரு. எஸ். சங்கர் | நகரமன்ற உறுப்பினர் |
| 13. | திரு. எஸ். கே. ரத்தினகுமார் | நகரமன்ற உறுப்பினர் |
| 14. | திருமதி. வி . மேரி | நகரமன்ற உறுப்பினர் |
| 15. | திரு. கே. பாலு | நகரமன்ற உறுப்பினர் |
| 16. | திருமதி. ஆர். உமாராணி | நகரமன்ற உறுப்பினர் |
| 17. | திரு. பி. அகிலா | நகரமன்ற உறுப்பினர் |
| 18. | திருமதி. எஸ். தமிழரசி | நகரமன்ற உறுப்பினர் |
| 19. | திரு. பி. யுவராஜ் | நகரமன்ற உறுப்பினர் |
| 20. | திரு. ஜெ. துளசி | நகரமன்ற உறுப்பினர் |
| 21. | திரு. ஆ.ந. ரமேஷ் | நகரமன்ற உறுப்பினர் |
| 22. | திரு. ஆர். வெங்கடேசன் | நகரமன்ற உறுப்பினர் |
| 23. | திருமதி. ஜி. வசந்தா | நகரமன்ற உறுப்பினர் |
| 24. | திருமதி. டி. மெஹருன்னிசா | நகரமன்ற உறுப்பினர் |
| 25. | திரு. வி. ரவி | நகரமன்ற உறுப்பினர் |
| 27. | திருமதி. ஆர். இந்திராணி | நகரமன்ற உறுப்பினர் |
| 28. | திருமதி. என். ரமணி | நகரமன்ற உறுப்பினர் |
| 29. | திரு. எஸ். செந்தில் வேல் | நகரமன்ற உறுப்பினர் |
| 30. | திரு. எஸ். முருகன் | நகரமன்ற உறுப்பினர் |
| 31. | திரு. பி. வெங்கடேசன் | நகரமன்ற உறுப்பினர் |
| 32. | திரு. கே. பீமராஜ் | நகரமன்ற உறுப்பினர் |
| 33. | திரு. எ.டி. செல்வி | நகரமன்ற உறுப்பினர் |

புதியதாக நகரமன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்க பெயர் பின்வருமாறு

25.10.2011 முதல் 31.03.2012 வரை

| வார்டு எண். | பெயர் | பதவி |
|---|---|---|
| | திருமதி. க. ஆனந்தகுமாரி | நகரமன்ற தலைவர் |
| 33. | திருமதி. ஏ. தேவசேனா | நகரமன்ற துணைத் தலைவர் |
| 1. | திரு. ஏ.கே. பிரபு | நகரமன்ற உறுப்பினர் |
| 2. | திரு. பி. கோபி | நகரமன்ற உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 3. | திருமதி. இ. அன்பு | நகரமன்ற உறுப்பினர் |
| 4. | திரு. பி. சரவணன் | நகரமன்ற உறுப்பினர் |
| 5. | திரு. என். ரமேஷ் | நகரமன்ற உறுப்பினர் |
| 6. | திரு. எஸ். எ. அன்சர் பாஷா | நகரமன்ற உறுப்பினர் |
| 7. | திருமதி. பி. விஜயலட்சுமி | நகரமன்ற உறுப்பினர் |
| 8. | திரு. கே. பாலாஜி | நகரமன்ற உறுப்பினர் |
| 9. | திரு. ஜி.வெங்கடேசன் | நகரமன்ற உறுப்பினர் |
| 10. | திரு. எ. ஜி. பாலகிருஷ்ணன் | நகரமன்ற உறுப்பினர் |
| 11. | திரு. ஏ.சி. பாபு | நகரமன்ற உறுப்பினர் |
| 12. | திரு. கே. சக்தி | நகரமன்ற உறுப்பினர் |
| 13. | திரு. எஸ். கே. ரத்தினகுமார் | நகரமன்ற உறுப்பினர் |
| 14. | திருமதி.டி. ரேணுகாம்பாள் | நகரமன்ற உறுப்பினர் |
| 15. | திரு.இ.பச்சையப்பன் | நகரமன்ற உறுப்பினர் |
| 16. | திருமதி. ஆர். உமாராணி | நகரமன்ற உறுப்பினர் |
| 17. | திருமதி. கே. குமாரி | நகரமன்ற உறுப்பினர் |
| 18. | திருமதி.ஜெ. ஜெயந்தி | நகரமன்ற உறுப்பினர் |
| 19. | திரு. வி.டி.அரசு | நகரமன்ற உறுப்பினர் |
| 20. | திரு. ஜமால்சேட் | நகரமன்ற உறுப்பினர் |
| 21. | திரு. ஆ.ந. ரமேஷ் | நகரமன்ற உறுப்பினர் |
| 22. | திரு. ஆர்.கணேசன் | நகரமன்ற உறுப்பினர் |
| 23. | திருமதி. எஸ். லட்சுமி | நகரமன்ற உறுப்பினர் |
| 24. | திருமதி.எஸ். பாத்திமா | நகரமன்ற உறுப்பினர் |
| 25. | திரு.எஸ். ஜோதிலிங்கம் | நகரமன்ற உறுப்பினர் |
| 26. | திருமதி.எஸ்.மீனா | நகரமன்ற உறுப்பினர் |
| 27. | திருமதி.கே. சித்ரா | நகரமன்ற உறுப்பினர் |
| 28. | திரு. ஆர்.தங்கராஜ் | நகரமன்ற உறுப்பினர் |
| 29. | திரு. எல்.செந்தில்குமார் | நகரமன்ற உறுப்பினர் |
| 30. | திரு. எ. வேலாயுதம் | நகரமன்ற உறுப்பினர் |
| 31. | திரு. வை.ஞானசந்திரன் | நகரமன்ற உறுப்பினர் |
| 32. | திரு. எச். ரவி | நகரமன்ற உறுப்பினர் |

| | |
|---|---|
| மொத்த உறுப்பினர் எண்ணிக்கை | 33 |
| பெண் உறுப்பினர்கள் (பொது) | 9 |
| மற்றவை பொது | 20 |
| தாழ்த்தப்பட்டவர்களுக்கு | |
| பெண்கள் | 14, 18, |
| பொது | 29, 31 |

**கூட்டங்கள்.**

1. நகரமன்றத்தின் சாதாரண கூட்டம் அந்தந்த மாதங்களில் நடத்தப்பட்டது. அவசியத்தை முன்னிட்டு அவசர கூட்டங்கள் அவ்வப்போது நடைபெற்றுள்ளது.

| | சாதாரணம் | அவசரம் | சிறப்பு |
|---|---|---|---|
| நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | 6 | 5 | 1 |
| முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை | 273 | 22 | 1 |

2. நகர மன்றத்திற்கு வைக்கப்படும் பொருட்கள் யாவும் அவ்வப்போது முடிவு செய்யப்படுகின்றன. நகராட்சி நடைமுறை தொகுப்பில் உள்ள முறையின் படியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் அட்டவணை 3ல் கண்டுள்ள விதிகளின் படியும், மன்றக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

**குழுக்கள்.**

அறிக்கையாண்டில் அடியிற்கண்ட குழுக்கள் செயல்பட்டு வந்தன.

| நிலையான குழுக்கள் | | கூட்டங்களின் எண்ணிக்கை | பொருள்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. நியமனக்குழு | | – | – |
| 2. ஒப்பந்தக்குழு. | | – | – |
| 3. 1. தனிப்பட்டக்குழு | | – | – |
| வரிமேல் முறையீட்டு குழு | | – | – |
| 2. வட்டக்குழுக்ள். | | – | – |
| அமைக்கப்படவில்லை | | – | – |
| 4. உள்ளூர் திட்ட குழுமம் | | – | – |

## குழு உறுப்பினர்கள்

### 1.4.2011 முதல் 24.10.2011 வரை

| | |
|---|---|
| 1. நியமனக்குழு தலைவர் | திருமதி. சாந்தி |
| நியமனக்குழு உறுப்பினர் | திரு. எஸ். சங்கர் |
| 2. ஒப்பந்தக்குழு தலைவர் | திருமதி. எல். சாந்தி |
| ஒப்பந்தக்குழு உறுப்பினர் | திரு. எஸ். ஏ. அன்சர்பாஷா |
| 3. வரி மேல்முறையீட்டு குழு தலைவர் | திருமதி. எல். சாந்தி |
| வரி மேல்முறையீட்டு குழு உறுப்பினர்கள் | திரு. எஸ். செல்வம் |
| | திரு. ஜெ. துளசி |
| | திரு. வி. ரவி |
| | திரு. எல். எஸ். செந்தில்வேல் |
| 4. உள்ளூர் திட்டக்குழு தலைவர் | திருமதி. எல். சாந்தி |
| உள்ளூர் திட்டக்குழு உறுப்பினர்கள் | திரு. டி. மெஹருன்னிஷா<br>திருமதி. பி. அகிலா, திரு. பி. யுவராஜ்.<br>திருமதி. ஜி. வசந்தா. |
| 5. இணைப்புக்குழுக்கள் அமைக்கப்படவில்லை. | |

### 25.10.2011 முதல் 31.03.2012 வரை

| | |
|---|---|
| நியமனக்குழு தலைவர் | திருமதி. க. ஆனந்தகுமாரி |
| நியமனக்குழு உறுப்பினர் | திரு. கே. பாலாஜி |
| 2. ஒப்பந்தக்குழு தலைவர் | திருமதி. க. ஆனந்தகுமாரி |
| ஒப்பந்தக்குழு உறுப்பினர் | திருமதி. ஜெ. ஜெயந்தி |
| 3. வரி மேல்முறையீட்டு குழு தலைவர் | திருமதி. க. ஆனந்தகுமாரி |
| வரி மேல்முறையீட்டு குழு உறுப்பினர்கள் | திருமதி. அன்பு |
| | திரு. வெவெங்கடேசன் |
| | திருமதி. பி. விஜயலட்சுமி |
| | திருமதி. கோ. சித்ரா |
| 4. உள்ளூர் திட்டக்குழு தலைவர் | திருமதி. க. ஆனந்தகுமாரி |
| உள்ளூர் திட்டக்குழு உறுப்பினர்கள் | அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் |
| இணைப்புக்குழுக்கள் அமைக்கப்படவில்லை. | – – – |

**மேலாண்மை.**

அலுவலக பணியாளர்கள் வரிவசூல் செய்யும் பணியாளர்கள் உள்பட அறிக்கையாண்டில் கீழ்கண்டவாறு செலவு செய்யப்பட்டுள்ளது.

ஆணையர் சம்பளம் மற்றும் பற்றுச் சீட்டுத் தொகை ஏதும் செலுத்தப்படவில்லை

| | |
|---|---|
| பொது நிர்வாகப் பணியாளர்கள் | 55,24,284 |
| வசூல் பணியாளர்கள் | 19,50,528 |
| **மொத்தம்** | **74,74,812** |

இந்நகராட்சி அலுவலகம் சொந்தக் கட்டிடத்தில் போதுமான வசதிகளுடன் இயங்கி வருகினறது.

**பணியமைப்பு– 2011–2012ம் அறிக்கையாண்டில் ஆரணி நகராட்சியில் பொறியியல் பிரிவில் பணிபுரியும் அதிகாரிகள் விவரம் :–**

| | |
|---|---|
| அ. பொறியாளர் | திரு. பா. செல்வம் |
| ஆ. இளநிலை பொறியாளர் | திரு.ஜே.பிரபாகரன் |
| இ. உதவி பொறியாளர் | காலியிடம் |

**சாலைகள், பாலங்கள், மற்றும் கட்டிடங்கள் ஏரிகள்**

**சாலைகள்.**

அ. இந்நகராட்சி எல்லைக்குள் நெடுஞ்சாலை இலாக்காவினால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளின் நீளம் 7.845 கி. மீ

| சாலைகளின் பெயர் | நீளம் |
|---|---|
| 1. ஆற்காடு ஆரணி வந்தவாசி சாலை | 2,816 கி. மீ |
| 2. ஆற்காடு களம்பூர் சாலை | 2.011 கி. மீ |
| 3. ஆரணி சேத்பட்டு சாலை | 0.805 கி.மீ |
| 4. ஆரணி தச்சூர் சாலை | 2.213 கி.மீ |
| | 7.845 கி.மீ |

ஆ. அறிக்கையாண்டில் கீழ்கண்வாறு இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த தெருக்களின் சாலைகளின் மொத்த நீளம். 58. 710 கி.மீ.

| சாலைகளின் விவரம் | 31.3.2012. |
|---|---|
| 1. தார் சாலை | 14.445 |
| 2. சிமெண்ட் சாலை | 41.859 |
| 3. ஜல்லிச் சாலை | 1.196 |
| 4. மண் சாலை | 1.210 |

அறிக்கையாண்டில் சாலை பராமரிப்புக்கான ரூ. 26.48 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

சாலைகளும், தெருக்களும் போதுமானதாக விசாலமுள்ளதாக இருக்கிற சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளில் ஆட்சேபணைகரமான ஆக்கிரமிப்புகளின் மீது புகார் வந்தவுடன் அப்புறப்பபத்தப்பட்டு ஆட்சேபணை இல்லாதவைகளுக்கு கட்டணம் வசூலித்தும் ஒழுங்குப் படுத்தபடுகிறது.

அறிக்கையாண்டில் நகராட்சி பொது சுகாதார பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களின் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | மினி ஆட்டோ | 5 – எண்ணிக்கை |
| 2. | மினி லாரி | 2 – எண்ணிக்கை |
| 3. | டம்பர் பிளேசர் | 1– எண்ணிக்கை |
| 4. | குடிநீர்லாரி | 1– எண்ணிக்கை |
| 5. | பெரியலாரி | 1– எண்ணிக்கை |
| 6. | ஈப்பு வாகனம் (Jeep) | 1– எண்ணிக்கை |

**விளக்கு வசதி.**

அறிக்கையாண்டில் கீழ்கண்டவாறு மின் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வந்துள்ளன.

01.04.2011 முதல் 31.3.20112 வரை

| | |
|---|---|
| 1. குழல் விளக்கு | 1589 |
| 2. சோடியம் ஆவி விளக்கு | 458 |
| 3. மெர்க்குரி விளக்கு | 34 |
| 4. உயர் கோபுர மின் விளக்கு | 5 |
| **மொத்தம்** | **2028** |

| | |
|---|---|
| 1. அறிக்கையாண்டில் தெருவிளக்கு மின் கட்டணம் | ரூ. 19.19 இலட்சம் |
| 2. பராமரிப்பு செலவு | ரூ. 7.00 இலட்சம் |
| மொத்தம் | **ரூ. 26.19 இலட்சம்** |

**குடிநீர் விநியோகம்**

இந்நகரத்தில் பின்வரும் ஆதாரங்களைக் கொண்டு குடிநீர் விநியோகம் நடைபெறுகிறது.

1. கமண்டல நாகநதி நீரேற்றும் நிலையம்
2. தச்சூர் நீரேற்றும் நிலையம்
3. ஆற்காடு பாலாறு நீரேற்று நிலையம்
4. ஆரணி ஆற்காடு தரைப்பாலம் நீரேற்று நிலையம்

**கமண்டல நாகநதி நீரேற்றும் நிலையம் :**

இந்த நீரேற்றும் நிலையம் 1951–ல் ஆரம்பிக்கப்பட்டது. 3 நீர் உறிஞ்சி கிணறுகள் 1 நீர் சேகரிக்கும் கிணறு ஆகியவைகள் அமைக்கப்பட்டுள்ளன. 20 குதிரை சக்தி திறன் கொண்ட இரண்டு மின் மோட்டார்கள் மேலும், 8 ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு தலா 5 குதிரை சக்தி திறன் மற்றும் 7.50 குதிசை சக்தி திறன் கொண்ட நீர் மூழ்கி மோட்டார் மூலம் நீர் இறைக்கப்பட்டு வருகிறது.

**தச்சூர் நீரேற்றும் நிலையம் :**

இந்நீரேற்றும் நிலையம் இந்நகரிலிருந்து 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. 3 நீர் உறிஞ்சி கிணறுகள் 5 குதிரை சக்தியுள்ள மின் மோட்டார்களுடன் கூடிய 4 உறை கிணறுகள், 7.50 குதிரை சக்தி திறன் கொண்ட 3 மின் மோட்டார்கள் உள்ளது. ஒதலவாடியில் ஒரு நீர் உறிஞ்சி கிணறு 25 குதிரை சக்தி திறன் கொண்ட ஒரு மின் மோட்டார் அமைக்கப்பட்டு நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. இவைகள் மூலம் நீர் சேகரிப்பு கொண்டு வந்து 50 குதிரை சக்தி திறன் கொண்ட மின் மோட்டார் மூலம் நீர் ஏற்றப்படுகிறது.

**ஆற்காடு பாலாறு குடிநீர் திட்டம் :**

ஆற்காடு பாலாற்று குடிநீர் திட்டம் 2004–ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. திட்டம் தமிழ்நாடு குடிநீர் வசதி வாரியத்தில் செயல்படுத்தப்பட்டு நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிலையத்தில் மூன்று உறிஞ்சு கிணறுகள் உள்ளது. இந்நிலையத்தில் இருந்து நாள் ஒன்றுக்கு 2.5 MLD நீர் இறைவு செய்யப்பட்டது. தற்போது கமண்டல நாகநதி, தச்சூர் ஆற்றுப் படுகையில் நகராட்சி பகுதிகளுக்கு ஒருநாள் விட்டு ஒரு நாள் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால் தற்போது இந்நீரேற்று நிலையம் இயக்கப்படவில்லை.

**மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | அலுவலக வளாகம் | – 8,00,000 | லிட்டர் |
| 2. | அலுவலக வளாகம் | – 5,00,000 | லிட்டர் |
| 3. | சைதாப்பேட்டை | – 3,00,000 | லிட்டர் |
| 4. | ராமகிருஷ்ணாப்பேட்டை | – 1,00,000 | லிட்டர் |
| 5. | அலுவலக வளாகம் | – 8,00,000 | லிட்டர் |
| 6. | கண்ணகிநகர் | – 4,00,000 | லிட்டர் |
| | மொத்தம் | –27,00,000 | லிட்டர் |

**தரைதொட்டி :**

| | | | |
|---|---|---|---|
| 1. | அலுவலக வளாகம் | – 4,00,000 | லிட்டர் |
| 1. | ஆழ்துளை குழாய் கிணறுகள் | – 192 | |
| 2. | பொதுக்குழாய்கள் | – 152 | |
| 3. | பவர் பம்புகள் | – 216 | |

**கல்வி.**

**கல்வி வசதி வாய்ப்பு.**

அறிக்கையாண்டில் நகராட்சியில் பள்ளிகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை. நகராட்சி பள்ளி கட்டிங்கள் மட்டும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**பணியாளர்கள்.**

இந்நகராட்சி பள்ளிகள் அனைத்தும் கல்வித்துறையின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. சார்நிலை கருவூலகத்தின் மூலம் ஊதியம் பெற்று வருகின்றனர்.

**புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். சத்துணவு திட்டம்.**

இந்நகராட்சியில் 5 வயது முதல் 9 வயது மற்றும் 10 வயது முதல் 14 வயது வரையிலுள்ள மாணவர்களுக்கான பள்ளி சத்துணவு மையங்கள் 10 ம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பள்ளி மையங்களை நிர்வகிப்பதற்கென தனியாக கணக்கர் பதவி 4.9.98 முதல் பணிபுரிந்து வருகின்றார்கள். 10 அமைப்பாளர்களும் , 10 சமையலரும் இதர அலுவலர்கள் அவ்வப்போது ஆய்வு செய்து குழுந்தைகளுக்கு வழஙகப்படுகிறது. உணவின் தரம், தண்ணீர் வசதி மற்றம் சுற்றுப்புற சுகாதார வசதி வருகை துாரம் குழந்ததைகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கண்காணித்தல் உடனுக்குடன் தக்க நடவடிக்கை எடுத்து தீர்க்கப்பட்டு வருகிறுது. ஓர் பவர் டில்லர் மூலம் சத்துணவு மையங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது.

**இடவசதி மற்றும் தளவவாட பொருட்கள்.**

ஆறிக்கையாண்டில் 1 பள்ளி வாடகை கட்டிடங்களிலும் 10 சொந்தக் கட்டிடங்களிலும் இயங்கி வந்தன, அனைத்து கட்டிடங்களிலும் இடவசதியும், காற்றோட்டும் உள்ளது. கட்டிடங்களின் வாடகைக்காக ரூ. 14,400/– செலவு செய்யப்பட்டுள்ளது.

**ஆரம்ப கல்வி கணக்கு.**

சொத்துகளின் ஆண்டு மதிப்பீடு பேரில் வருடத்திற்கு 5 சதவீதம் கல்வி வரி வசூலிக்கப்பட்டது. ஆரம்ப கல்வி சம்மந்தமாக செலுத்த தொகை கீழ்க்கண்டவாறு ஈடு செய்யப்பட்டது.

1. கல்வி வரி வசூல் ரூ. **11,55,790**
2. கல்வி முன் மானியம் ரூ. –
3. பற்றாக்குறை முன்மானிய. ரூ. –
4. நகராட்சி நிதியிலிருந்து முன்
   பணம் மற்றும் பங்கு தொகை ரூ. –

**மொத்தம் ரூ. 11,55,790**

**உயர் நிலைக்கல்வி.**

இந்நகராட்சியில் உயர்நிலைப் பள்ளிகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

**சிறப்பு பள்ளிக்கூடங்கள்.**

இந்நகராட்சியில் சிறப்பு பள்ளிகள் ஏதும் பாராமரிக்கப்படவில்லை.

**பொது நூல் நிலையங்கள்.**

மாவட்ட நூலக குழுவினரால் ஒரு பொது நூல் நிலையம் இந்நகரில் பராமரிக்கப்பட்டு வருகிறற. இந்நகராட்சியினால் 2 படிப்பகங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இத்தலைப்பின் கீழ் ரூ. 14,500 செலவழிக்கப்பட்டுள்ளது.

**பொது சுகாதாரம்.**

இந்நகராட்சியில் 3 தாய் சேய் நல விடுதிகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. தாய்சேய் நல விடுதிகளுக்கு 4 மகப்பேறு உதவியாளர்களும், 5 மகப்பேறு ஆயாக்களும் பணிபுரிந்து வந்தனர், தாய்சேய் நல விடுதிகள் பராமரிப்பிற்காக மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் 5 மகப்பேறு ஆயா பணியிடம் காலியாக உள்ளுது. தாய்சேய் நலவிடுதிகள் பராமரிப்பிற்காக அறிக்கையாண்டில் ரூ. 22.56 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டின் ரூ. 21.23 இலட்சம் செலவு ஆகும்.

**பிறப்பு விகிதம், மகப்பேறு நிவாரணமும்.**

2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கொடுப்பின் படி இந்நகரில் மக்கள் தொகை 63628 ஆகும். இந்நகராட்சியின் மகப்பேறு நிலையங்களில் பணிபுரியும் தேர்ச்சி பெற்ற மகப்பேறு உதவியாளர்களால் பார்க்கப்ட்ட பிறப்புக்கள் 839 ஆகும். இறப்பு 388 ஆகும். அறிக்கையாண்டில் இறந்து பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 12 இது பிறப்பு விகிதத்தில் 13.01% ஆகும். இவ்வகையான அறிவிப்பினை எடுக்க அரசு மருத்துவ கழகத்தில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் விவரம் மகப்பேறு உதவியாளர்கள் மூலம் தாய்மார்களுக்கு விளக்கப்பட்டு வருகிறது.

மகப்பேறு உதவியாளர்களால் 75 பிரசவங்கள் பார்க்கப்பட்டன.

**இறப்பு விகிதமும் தொற்று வியாதியும்.**

அறிக்கையாண்டில் பதிவான இறப்பு 388 இது சென்ற ஆண்டில் 242 ஆகும். அறிக்கையாண்டில் கொள்ளை நோய் தொற்று வியாதிகள் கண்டு எவரும் இறக்கவில்லை.

**குடும்ப நலம்.**

இத்திட்டத்தில் இலக்கு 100% இதில் 100% நடப்பு ஆண்டில் செய்யப்பட்டுள்ளது. சுகாதார மேம்பாடு மற்றும் குடும்ப நலம் பற்றி அவ்வப்போது படக்காட்சி மற்றும் விளம்பர நோட்டீஸ் மூலம் விளக்கப்பட்டு வருகின்றன.

**நிவாரணப் பணி.**

இந்நகராட்சியின் பராமரிப்பில் இயங்கி வரும் சித்தா மருத்துவமனையில் ஒரு மருத்துவ அலுவலர், ஒரு பெருக்குபவர் பணி புரிந்து வந்தனர்.

8.9.2004 முதல் மருத்துவ அலுவலர் மாறுதல் செய்யப்பட்டதால் பணியிடம் காலியாக உள்ள பணியிடத்திற்கு ஒரு சித்தா மருத்துவ அலுவலர் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார். ஒரு பெறுக்குபவரை திருவள்ளுவர் தெரு, மகப்பேறு நிலையத்தில் ஆயாவாக மாற்று பணிபுரிய அனுமதிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றார். இத்தலைப்பின் கீழ் அறிக்கையாண்டில் செலவு ரூ. 4,53,586/– ஆகும்

இந்நகரில் அரசு பொது மருத்துவமனை ஒன்று செயல்பட்டு வருகிறது. அரசு மருத்துவமனையில் அறிக்கையாண்டில் 27,624 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படடுள்ளது.

**பணியாளர்கள்.**

ஒரு துப்புரவு அலுவலர் மற்றும் 3 துப்புரவு ஆய்வாளர்கள் 6 துப்புரவு மேற்பார்வையாளர்களும் துப்புரவு பணியை ஆய்வு செய்துவருகின்றனர். அறிக்கையாண்டில் ரூ. 165.07 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டில் ரூ. 159.67 இலட்சம் ஆகும்.

**உடல்நல பாதுகாப்பு.**

துப்புரவு பணியாளர்களைக் கொண்டு துப்புரவு பணி செவ்வனே நடந்து வருகிறது. குப்பைகளை அப்புறப்படுத்த இந்நகராட்சிக்கு 3 வண்டிகளும் 1 டிராக்டர், 5 ஆட்டோ, 9 தள்ளுவண்டி, ஒரு பெரிய லாரி, மினிலாரியும் மூன்று இழு வண்டியும் சொந்தமாக உள்ளது இவற்றில் தற்போது குப்பைகளை அப்புறப்படுத்த வண்டிகளும் பயன்படுத்தப்பட்டன. பழைய லாரி பழுதடைந்து 01.03.87 முதல் உபயோகப்படாமல் உள்ளது இதனை பொது ஏலத்தில் விட நடிவடிக்கை ஏடுக்கப்பட்டு வருகிறது. இரண்டு லாரிகள் வாங்கி உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. நகரை சுத்தமாகவும், தூய்மையாகவும், வைக்க ஆவன செய்யப்பட்டு வருகின்றது. பொது சுகாதாரப் பணிகளுக்கு 2 டில்லர் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ரூ. 21.24 இலட்சம் அறிக்கையாண்டில் செலவு செய்யப்பட்டுள்ளது.

**உரம் தாயாரிப்பு.**

அறிக்கையாண்டில் 24.00 மெ.டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதில் பிளாஸ்டிக் பொருள்களும், கண்ணாடிதுகள்களும், இரும்பு ஆணிகளும் சேர்ந்துள்ளதால் உரம் தயாரிக்கப்படவில்லை. தற்போது மக்கும் குப்பை மக்காத குப்பை என இரு வகையாக பிரித்து வாங்கப்பட்டு வருகிறது. அதற்கு போதுமான இடவசதி இல்லாததால் உரம் தயாரிக்கப்படுவதில்லை. அதனால் இந்த ஆண்டின் வருமானம் இல்லை.

**உணவு பொருள் கலப்படம்.**

உணவு மாதிரி எடுப்பது தனித்துறையாக மாற்றப்பட்டதால் உணவு மாதிரிகள் எடுக்கப்படவில்லை.

**கேடும், அருவெறுக்கத் தரும் தொழில்கள்.**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 249 மற்றும் 250 ன் கீழ் உரிமம் வழங்கப்பட்டன. அறிக்கையாண்டில் 410 கடைகள் மற்றும் நிறுவனங்குளக்கு உரிமம் வழங்கப்பட்டன. இதன் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 2,48,330/– அனைத்து நிறுவனங்களை அவ்வப்போது ஆணையர் அவர்களாலும், துப்புரவு ஆய்வாளர்களாலும், பார்வையிட்டு அவைகளுக்கேற்ப உரிமையாணைகள் வழங்கப்பட்டுள்ளது.

**சந்தைகளும் திருவிழாக்குளம்.**

இந்நகராட்சியில் சிறப்பு சந்தைகள் மற்றும் திருவிழாக்கள் நடைபெறுவதில்லை.

**நகர் நலமும் பாதுகாப்பும்.**

நகரில் அரசின் தீயணைப்பு நிலையம் ஒன்று உள்ளது. அறிக்கையாண்டில் இறந்தவர்கள் இல்லை.

**2011 – 2012** ம் நிதியாண்டில் நகர எல்லைக்குள் மட்டுமல்லாது சுற்றுப்புற கிராமங்களிலிருந்து வயிற்றுப்போக்கு நோயாளிகள் அரசு மருத்துவமனையில் நூற்றுக்கணக்கானோர் சிகிச்சை பெற்றதையடுத்து மேலும் நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. கிருமிநாசினிகளான பினாயில் தெளிக்கப்பட்டது. குடிநீரில் பிளீச்சிங் பவுடர் கலந்து வழங்கப்பட்டது.

**பேருந்துகளும் உரிமம் வழங்கலும்**

இந்நகரமன்ற நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சந்தைகள், வண்டிமேடு பேருந்து நிலையம் மற்றும் ஆடு ஆறக்கும் தொட்டி மூலம் வருவாய்.

| வருடம் | சந்தைகள் மற்றும் அனைத்து கடைகள் | வண்டி மேடு பஸ் நிலையம் | ஆடு அறுக்கும் மற்றும் மாடு தொட்டி |
|---|---|---|---|
| 2006 – 2007 | 4392700 | 1294760 | 129102 |
| 2007 – 2008 | 4924617 | 1270000 | 141600 |
| 2008 – 2009 | 4969074 | 1383331 | 153100 |
| 2009–2010 | 5396354 | 760959 | 2242 |
| 2010–2011 | 6054567 | 478636 | 23055 |
| 2011–2012 | 6054567 | 478636 | 23055 |

அறிக்கையாண்டில் மேற்காணும் இனங்கள் குத்தகைக்கு விடப்பட்டன.

**வண்டி பேட்டைகள் பேருந்து நிலையங்கள்.**

இந்நகராட்சியினால் 5 வண்டிப்பேட்டைகளும், பழைய பேருந்து நிலையம் ஒன்றும், புதிய பேருந்து நிலையம் ஒன்றும் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. பழைய பேருந்து நிலையத்தில் 12 இருக்கைகள் கொண்டு ஒரு பொது மல அறையும், ஒரு பொது குடிநீர் குழாயும் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்தலைப்பின் கீழ் சாதாரணம் மற்றும் மூலதனம் சேர்ந்து கிடைத்த வருமானம் ரூ. .00 இது சென்ற ஆண்டில் ரூ. 5,62,163.00 ஆகும். இந்நகரில் தனிப்பட்ட நபர்களால் வண்டிப்பேட்டைகள் நடத்தப்பட்டவில்லை.

**நோய் தடுப்பு நடவடிக்கைகள் .**

2011–2012 ம் ஆண்டின் அரசு அறிவிப்பின் நகரின் அனைத்து பகுதிகளிலும் 5 வயதிற்குட்பட்ட 7407 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து அளிக்கப்பட்டது. அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் 15091 மாணவ மாணவிகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு இரும்புசத்து மாத்திரைகள் மற்றும் பூச்சி மாத்திரைகள் வழங்கி தடுப்பு ஊசிகள் போடப்பட்டது. மேலும் யானைக்கால் நோய் தடுப்பு பணிக்கு 55,000 நபர்களுக்கு மாத்திரைகள் வழங்கப்பட்டன. இது தவிர 6 மாதம் முதல் 60 மாதம் வரையுள்ள 4942 குழந்தைகளுக்கு வைட்டபின் ஏ திரவம் வழங்கப்பட்டது.

**ஆடு, மாடு, அறுக்கும் தொட்டி.**

நகராட்சியினால் ஆடு மற்றும் மாடு அறுக்கும் தொட்டிகள் பராமரிக்கப்பட்டடு வருகிறது. இதன் மூலம் அறிக்கை ஆண்டில் வருவாய் ரூ. 23,055/– ஆகும்.

**மரம் நடுதல்.**

நகராட்சி பொறியியல் பிரிவு சிப்பந்திகளால் இரண்டு பூங்காக்களிலும் உள்ள மரச்செடிகள் பராமரிக்கப்பட்டு அறிக்கையாண்டில் நகராட்சிக்கு சொந்தமாக 294 மரங்கள் இருந்தன. புதியதாக 250 மரக்கன்றுனள் நடப்பட்டுள்ளன.

**செலவினங்கள்.**

வெங்கட்ராமன் பூங்கா, காந்தி நகர் பூங்கா, தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. இத்தலைப்பின் கீழ் அறிக்கையாண்டில் பணியாளர்கள் ஊதியமாக 1,48,632/- செலவு செய்யப்பட்டது. இது சென்ற ஆண்டில் 93,000/– ஆகும்.

**நாளங்காடி.**

நகராட்சியின் பழைய மார்க்கெட் வளாகத்தில் இடித்துவிட்டு அந்த இடத்தில் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கடன் உதவி பெற்று 278 கடைகள் கட்டப்பட்டு அரசு உத்திரவின்படி மேற்படி இடத்தில் பொது ஏலத்தின் மூலம் கடைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டு வருமானம் சுமார். ரூ. 57.04 இலட்சம் ஆகும்.

## ஆரணி நகராட்சி
## 2011 – 2012 ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட பணிகள் குறித்த விவரம்
## வருவாய் நிதி 2011 – 2012

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தெருவிளக்கு தானியங்கி சுவிட்சுகள் பழுது பார்த்தல் பணி 2010–11 | 0.99 |
| 2 | வெங்கட்ராமன் பூங்கா தெருவில் சிறுபாலம் அமைத்தல் | 0.50 |
| 3 | வெங்கட்ராமன் பூங்கா தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 6.25 |
| 4 | மாடு அறுக்கும் தொட்டியில் சிமெண்ட் ஷீட்செட் அமைத்தல் நிர்வாக மூலமாக பணி செய்தது | 1.30 |
| 5 | வார்டு 27–ல் உள்ள பொதுக்கழிப்பிடம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்தல் | 0.30 |
| 6 | வார்டு 1 – புதுகாமூர் ரோடில் உள்ள நவீன எரிவாயு தகன மேடை இடத்திற்கு தார்சாலை அமைத்தல் | 3.50 |

| | | |
|---|---|---|
| 7 | வார்டு 1 – புதுகாமூர் ரோடில் உள்ள நவீன எரிவாயு தகன மேடை இடத்திற்கு புதிய ஆழ்துறை கிணறு அமைத்து சிறுமின்விசை பம்பு மற்றும் மின்சார வசதி செய்தல் | 1.75 |
| 8 | வார்டு எண் 3 – வெற்றிலைக்கார தெருவில் உள்ள பொதுக்– கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் செய்தல் | 0.35 |
| 9 | வார்டு எண் 12 – மாதவராயன்பேட்டை , செல்வவிநாயகர் கோயில் தெருவில் சிமெண்ட் சாய்தளம் அமைத்தல் | 0.30 |
| 10 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான 5– எண்ணிக்கை உயர்மின் கோபுர விளக்குகள் பராமரிப்பு பணிகள் செய்தல் | 2.00 |
| 11 | வார்டு எண் 26 – நாடகசாலைபேட்டை தெருவின் அருகில் சிமெண்ட் சாலை, பவர் அவுஸ்தெரு தெற்குபுறம் சிறுபாலம் அமைத்தல் | 1.00 |
| 12 | ஆரணி நகராட்சி எல்லக்குட்பட்ட காந்திரோடு காமராஜர் சிலை பராமரிப்பு பணிகள் செய்தல் | 0.05 |
| 13 | ஆரணிபுதிய பேருந்து நிலையத்தில் மண்மேடுகளை அகற்றி பேட்ஜ் ஒர்க் செய்தல் | 3.93 |
| 14 | கோட்டை வடக்கு தெருவில்சிமெண்ட் சாலை மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 10.00 |
| 15 | உள்ளாட்சி தேர்தல் வாக்கு எண்ணிக்கை இடத்தில் அடிப்படை வசதிகள் செய்தல் | 3.70 |
| 16 | வார்டு எண் 29 – ல் குடிநீர் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 4.10 |
| 17 | அலுவலக வளாகத்தில் உள்ள 30 எச்.பி. மின்மோட்டார் பழுது பார்த்தல் | 0.25 |
| 18 | வார்டு எண் 9 – பிள்ளையார் கோயில் தெரு, ஜீவானந்தம் தெருவில் குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 0.50 |
| 19 | ஆரணி நகராட்சி தற்காலிக பேருந்து நிலையத்தில் கிணற்று முரம்பு அடித்தல் | 0.50 |
| 20 | ஆரணி நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் குளியல் அறை, பயணிகள் ஓய்வு அறை, மழைநீர் வடிகால் பணிகள் | 5.00 |
| 21 | ஆரணி நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் சுற்றுச்சுவர் மழைநீர் வடிகால் பணிகள் செய்தல் | 15.00 |
| 22 | ஆரணி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தின் உட்புறம் சிமெண்ட் பேட்ஜ் மற்றும் நகராட்சி சாலை தார் பேட்ஜ் ஒர்க் செய்தல் | 1.50 |
| | **மொத்தம்** | **62.77** |
| | **குடிநீர் நிதி 2011 – 2012** | |
| 1 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் மேல்நிலை தொட்டிகள் பராமரிப்பு பணிகள் மற்றும் வர்ணம் பூசுதல் | 5.00 |
| 2 | வார்டு எண் 12 – கல்யாணசுந்தரனார் தெரு, விநாயகர் கோயில் தெரு, வார்டு எண் 14 – திருவள்ளுவர் தெரு குடிநீர் அவிபிருத்தி பணிகள் செய்தல் | 2.30 |
| 3 | ஆரணி நகராட்சி அலுவலக பின்புறத்திலிருந்து கார்த்திகேயன் ரோடு அன்னியம்மன் கோயில் வரை குடிநீர் நீர்உந்து பைப்லைன் அமைத்தல் | 4.50 |

| | | |
|---|---|---|
| 4 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான தச்சூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள நீர்மூழ்கி மோட்டார் பழுது, பைப்லைன் பழுது, மின்வயர்கள் மாற்றி அமைத்தல் | 3.10 |
| 5 | வார்டு எண் 23– சந்திரகுளம் அருகில் உள்ள சிறுமின் விசை பம்பு அப்புறப்படுத்துதல் | 0.30 |
| 6 | கூார்டு எண் 27 – கமண்டலநாகநதி தெரு, வீரபத்திரன் தெருவில் GI பைப்பினை அகற்றி PVC பைப்பாக மாற்றி அமைத்தல் | 0.40 |
| 7 | ஆரணி நகராட்சி பகுதிகளில் உள்ள சிறுமின் விசை பம்புகள் 01.03.11 முதல் 31.03.12 வரை பராமரிப்பு பணிகள் செய்தல் | 6.00 |
| 8 | ஆற்காடு பாலாற்றிலிருந்து வரும் பம்பிங் மெயின் பழுது ஆறு இடங்களில் சரி செய்தல் | 2.80 |
| 9 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் மேல்நிலை தொட்டிகள் பராமரிப்பு பணிகள் மற்றும் வர்ணம் பூசுதல் | 2.50 |
| 10 | தச்சூர் தலைமை நீரேற்று நிலையம் முதல் ஆரணி வரை பம்பிங் மெயின் உடைப்பு சரி செய்தல் | 0.44 |
| 11 | சத்தியமூர்த்தி ரோடு, ஔவையார் தெரு இணைப்பு, கார்த்திகேயன் ரோடு ஆகிய இடங்களில் 12 இன்ச் வால்வுகள் பழுது பார்த்தல் | 0.98 |
| 12 | வார்டு எண் 13 – கான்ட்ராக்டர் பொன்னுசாமி தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின்விசை பம்பு அமைத்தல் | 0.80 |
| 13 | வார்டு எண் 3 – சாந்தா தெரு விரிவு பகுதியில் உள்ள சிறுமின் விசை பம்பு, மழைநீர் வடிகால் பராமரிப்பு பணிகள் செய்தல் | 0.50 |
| 14 | ஆரணி நகராட்சிக்கு தேவையான 25 எண்ணிக்கை நீர்மூழ்கி மின்மோட்டார்கள் வாங்குதல் | 6.00 |
| 15 | ஆரணி பழைய பேருந்து நிலையம் முதல் நகர காவல் நிலையம் வரை பம்பிங் மெயின் பழுது பார்த்தல் | 1.18 |
| 16 | ஆற்காடு ரோட்டில் உள்ள 10 எச்.பி. மின்மோட்டார் பழுதுபார்த்தல் | 0.22 |
| 17 | வார்டு எண் 18 – அம்பேத்கார் நகர் பிள்ளையார் கோயில் தெருவில் குடிநீர் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 0.15 |
| | மொத்தம் | 37.17 |
| | கல்வி நிதி 2011 – 2012 | |
| 1 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான பழனியாண்டவர் கோயில் தெரு நகராட்சி பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல் | 14.00 |
| 2 | வார்டு எண் 25 – ல் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி பராமரிப்பு பணிகள் செயதல் | 2.50 |
| | மொத்தம் | 16.50 |
| | பின்தங்கிய மண்டல மான்ய நிதி ( BRGF) | |
| 1 | பெரியகடை தெருவில் சிமெண்ட் சாலை, மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 25.00 |
| 2 | வார்டு எண் 32– கோட்டை கிழக்கு தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 6.85 |

| | | |
|---|---|---|
| 3 | வார்டு எண் 4 – மோகனன் தெரு கிழக்கு புறம் சிமெண்ட் சாலை, மழைநீர் வடிகால் அமைத்தல் | 2.75 |
| 4 | வார்டு எண் 28 – சைசத தருமராஜா கோயில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 7.00 |
| | **மொத்தம்** | **41.60** |
| | **உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி இயக்குதல் மற்றும் பராமரிப்பு 2010 – 2011** | |
| 1 | ஆரணி நகராட்சி புதிய பேருந்து நிலையம், பொது கட்டண கழிவறை புதுப்பிக்கும் பணிகள் செய்தல் | 45.00 |
| | **உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி 2009 – 2010** | |
| 2 | ஆரணி நகராட்சி பழைய பேருந்து நிலையம் புதுப்பித்து கடைகள் கட்டுதல் | 100.00 |
| | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2009–10** | |
| 1 | வார்டு எண் 2 – ஆறுமுகம் தெருவில் சிமெண்ட் சாலை , தடுப்புச் சுவர் அமைத்தல் | 0.80 |
| | பகுதி – 2 திட்டம் 2007 – 2008 | |
| 1 | ஆரணி நகராட்சி புதுகாமூர் தெருவில் நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல் 5–வது பகுதி பட்டியல் | 3.24 |
| | 12–வது நிதிக்குழு திட்டம் 2007 – 2008 முதல் 2008 –09 | |
| 1 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான எருக்கிடங்கில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 24.74 |
| 2 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான எருக்கிடங்கில் தார்சாலை அமைத்தல் | 4.55 |

**வரியினம்.**

| அறிக்கையாண்டில் சொத்துவரி | ரூ. இலட்சத்தில் |
|---|---|
| அறிக்கையாண்டு கேட்பு | 277.59 |
| அறிக்கையாண்டில் வசூல் | 168.36 |
| வசூல் சதவீதம் | 61.02 |

**வரியில்லாயினம்.**

| அறிக்கையாண்டில் வரியில்லாயினத்தில் | ரூ. இலட்சத்தில் |
|---|---|
| இனத்தில் கேட்பு | 107.04 |
| வசூல் | 64.86 |
| வசூல் சதவீதம் | 60.59 |

**தணிக்கை**

1985 – 86 ஆம் ஆண்டு முதல் 2008 – 2009 ஆம் ஆண்டு முடிய மொத்தம் 1206 தணிக்கை தடை பத்திகள் நிலுவையாக உள்ளன. இவற்றில் 213 நீக்கம் செய்யப்பட்டு மீதம் 1001 நிலுவையில் உள்ளது. மேலும் இந்நகராட்சியில் அடுத்து நடைபெறும் கூட்டமர்வின் போது மேற்படி தணிக்கை தடை பத்திகள் நீக்கம் செய்ய போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**சிறுசேமிப்பு.**

அறிக்கையாண்டில் சிறுசேமிப்புத் திட்டத்திற்காக இலக்கு ஏதும் நிர்ணயிக்கப் –

படவில்லை.

**வழக்கு.**

குத்தகை இனத்தில் 5 வழக்குகள் நிலுவையாக உள்ளது. மேற்படி வழக்குகளை விரைவில் முடித்துத்தருமாறு நகராட்சி வழக்கறிஞர் கோரப்பட்டுள்ளார்.

**பொது வருவாய்.**

**வருவாய் கணக்கு.**

இந்நகராட்சியில் கீழ்கண்டவாறு வரிகள் விதிக்கப்பட்டு வருகின்றன.

**சொத்துவரி பிரிவு 81 க் கீழ்.**

1. வருவாய் கணக்கு – 6.5%
2. நீரளிப்பு வரி சாக்கடை வரி – 8.5%
3. கல்வி வரி – 2.5%
4. நூலக வரி – 1.5%

14,205 சொத்துவரி விதிப்புகள் உள்ளன. சொத்துவரி விகிதம் ரூ. 19%

**தொழில் வரி விகிதம்.**

| வ. எண். | 6 மாதம் சம்பளங்கள் அல்லது கூலிகளைப் பெறுகின்ற நபர்களின் | அரையாண்டுக்கான வரி விகிதம் 20.1.2009 முதல் |
|---|---|---|
| 1 | ரூ. 21000 முதல் 30000 வரை | ரூ. 100 |
| 2 | ரூ. 30001 முதல் 45000 வரை | ரூ. 260 |
| 3 | ரூ. 45001 முதல் 60000 வரை | ரூ. 505 |
| 4 | ரூ. 60001 முதல் 75000 வரை | ரூ. 765 |
| 5 | ரூ. 75000 மேல் | ரூ. 1015 |

சென்ற ஆண்டில் 3000 இனங்களுக்கு தொழில்வரி விதிக்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் 3275 இனங்களுக்கு தொழில் வரி விதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு. மாத ஊதியத்தில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை.

(அடிப்படைச் சம்பளம், அகவிலைப்படி மற்றும் இதரப்படிகள்)

| வ. எண். | நகராட்சி எல்லையில் நாய்களுக்கு உரிமம் கட்டணம் | |
|---|---|---|
| 1 | நாய் 1 க்கு | ரூ. 25.00 |

**குடிநீர் கட்டணம்.**

நகராட்சி எல்லைக்குள் உள்ள அனைத்து வீடுகள் தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசுக்கட்டிடங்கள் ஆகியவற்றிக்கு குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மீட்டர் இணைப்புக்கு ரூ. 60.00 என கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது. இதில் ஆண்டு கேட்பு மீட்டர் இணைப்பு மூலம் கட்டணம் ரூ. 43.12 இலட்சம் (இணைப்பு 5783)

**நகர அமைப்பு பிரிவு.**

நகர அமைப்பு பிரிவுல் இரண்டு நகர அமைப்பு ஆய்வர் மற்றும் சங்கிலியாளர் ஒரு நபர்களும் பணிபுரிந்து வருகின்றார். நகரமைப்பு அலுவலர் இரண்டாம் நிலை பணி தோற்றுவிக்க அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளது.

**இந்நகராட்சி எல்லைக்குள் இரண்டு நகரமைப்பு திட்டங்கள் உள்ளன.**

பொரி பொரிச்சான் பாளையம் நகரமமைப்பு திட்டம்.

வேலூர், நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், அவர்களின்கடித ந.க.எண். 1937/2004/வே.ம.ந. நாள் 17.09.2012–ல் ஆரணி உள்ளூர் திட்டக் குழுமம் பொரிபொரிச்சான் – பாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் ந.ஊ.சட்டம் 1971 பிரிவு 25–ன்கீழ் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2 அவர்ர்ளின் செயல்முற உத்திரவு கடித எண். 6816/2005/டி.பி–1, நாள் 28.03.2007–ல் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து படிவம் 9–ல் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 27(1)–ன்படி தமிழ்நாடு அரசிதழ், மாவட்ட அரசிதழ், தினசரி செய்தித்தாள், மண்டல துணை இயக்குநரகம், அறிவிப்பு பலகை, உள்ளூர் திட்டக் குழுமம் அறிவிப்பு பலகை, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக அறிவிப்பு பலகைகளில் விளம்பரம் செய்ய வேண்டி உள்ளதால் அதற்கான செலவினங்களுக்கு உள்ளூர் திட்டக் குழுமத்தின் ஒப்புதல் பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது..

ஆரணி உள்ளூர் திட்டக்குழு பகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட முழுமை திட்டத்தினை மறு ஆய்வு செய்து நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 24(2)–ன்கீழ் அரசாணை எண். 267 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 21.08.2007ல் அரவிக் இணக்கம் பெறப்பட்டு உள்ளது. முழுமைத்திட்டம் அரசின் மறு ஆய்வு இணக்கம் பெறப்பட்டதை தொடர்ந்து, முழுமைத் திட்ட விதி 7 , 8 , 9 மற்றும் 10 ஆகியவற்றின்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி

இருப்பதால் முழுமைத்திட்ட விதி 15—ல் படிவம் 1—ஐ தமிழ்நாடு அரசிதழ், மாவட்ட அரசிதழ் மற்றும் உள்ளூர் தினசரி நாளிதழ் ஆகியவற்றில் விளம்பரம் செய்ய வேண்டியுள்ளதா. , அதற்கான செலவினங்களுக்குட்பட்டு உள்ளூர் திட்ட குழுமத்தில் ஒப்புதல் பெற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

1. கீழ் ஆரணி விரிவு மேம்பாட்டு திட்டம்

மேற்குறிப்பிட்ட திட்டங்கள் வரிசை எண். 1

கீழ் ஆரணி திட்டத்தில் பொது இடங்கள் சாலைகள், மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**ஸ்வர்ண ஜெயந்தி திட்டம்.**

ஸ்வர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜானா திட்டத்தின் கீழ் வறுமைக்ககோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் வங்கி மூலம் கடன் உதவி பெற்று சிறு தொழில் செய்ய, 44 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, கனரா வங்கி, ஆரணி கூட்டுறவு வங்கி ஆகிய வங்கிக்ளுக்கு விண்ணப்பிங்கள் பரிந்துரைக்கப்பட்டு 33 விண்ணப்பங்களுக்கு கடன் உதவி தொகை வழங்கப்பட்டு உள்ளது.

மேலும் புடவையில் பெயின்டிங் செய்யும் பயிற்சிக்கு வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் 43 மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

**பொது வரவு.**

| | |
|---|---|
| அறிக்கையாண்டில் மொத்த ஆரம்ப கையிருப்பு | — ரூ. 1,80,92,412 |
| அறிக்கையாண்டில் சாதாரணமும் மூலதனமும் சேர்த்து கிடைத்த மொத்த வருமானம் | — ரூ. 15.02,80,000 |
| அறிக்கையாண்டில் சாதாரணமும் மூலதனமும் சேர்த்து மொத்த செலவு | — ரூ. 13,41,46,000 |
| மொத்த கையிருப்பு | — ரூ. 3,42,26,412 |

**கடன்கள்.**

31.3.2009 முடிய அரசினரிடமிருந்து வாங்கிய கடன் தொகையை திருப்பி செலுத்திய விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண் | 1.4.2010 ல் நிலுவையிலுள்ள மொத்த கடன் தொகை | அறிக்கையாண்டில் திருப்பி செலுத்திய தொகை | 31.03.2011 நிலுவை |
|---|---|---|---|
| 1. ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்ட கடன் (IDSMT) | 1,76,67,247/— | 44,10,435/— | 1,32,56,812/— |

**முதலீடுகள்.**

அறிக்கையாண்டில் முதலீடுகள் ஏதுமில்லை

**கணக்கு அறிக்கை.**

2011 – 2012 ம் ஆண்டுக் கணக்கு தணிக்கைத் துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பொது குறிப்பு.

நகராட்சி நிர்வாகம் மேம்பட ஒத்துழப்பு நல்கிய அனைத்து அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் நகர மன்ற தலைவர், நகரமன்ற துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

ஆணையாளர்
ஆரணி நகராட்சி